**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**திருச்சிராப்பள்ளி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(02.04.2025 முதல் 06.04.2025)**

**அறிக்கை எண் 01/2025** **தேதி. 01.04.2025**

## திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் 28.03.2025 முதல் 31.03.2025 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 38 - 39 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 23 - 25 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 - 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை திருச்சிராப்பள்ளி (02.04.2025 முதல் 06.04.2025)

| கடந்த வார வானிலை (28.03.2025 முதல் 31.03.2025) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 06.04.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 28/03 | நாள்-2 29/03 | நாள்-3 30/03 | நாள்-4 31/03 | தேதி | நாள்-1 02/04 | நாள்-2 03/04 | நாள்-3 04/04 | நாள்-4 05/04 | நாள்-5 06/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 4 | 8 | 22 | 24 |
| 38 | 39 | 39 | 38 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 36 | 35 | 34 | 33 | 32 |
| 25 | 24 | 23 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 26 | 25 | 24 | 23 |
| 6 | 3 | 2 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 6 | 7 | 7 |
| 80 | 76 | 76 | 78 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 80 | 80 | 80 |
| 33 | 26 | 33 | 40 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 50 | 40 | 40 | 40 |
| 8 | 9 | 8 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 12 | 6 | 8 | 8 |
| கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றுவீசும் திசை | தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

## திருச்சிராப்பள்ளி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 03.04.2025 முதல் 06.04.2025 ஆகிய தினங்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.. அதிகபட்ச வெப்பநிலை 32 - 36 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 26 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 6 - 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| **பொது** | வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும். |
| | அடுத்த நாட்களுக்கு வறண்ட வானிலை காணப்படுவதால் கரும்பு, எள் மற்றும் நெல் தரிசப் பருத்திக்கு சீராக நீர் பாய்ச்சவும். |

| | | |
|---|---|---|
| | | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். மேலும் கோடை உழவு செய்யவும். |
| **பயறுவகை பயிர்கள்** | | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயறுவகை பயிர்களில் சாறு உறுஞ்சும் பூச்சிகள் தாக்கம் தென்பட்டால் 5 சத வேப்பங்கொட்டை சாறு கரைசலை தெளிக்கவேண்டும். |
| **தென்னை** | | தென்னை மரத்தை சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பது கோடையில் மழை நீரை மண்ணில் சேமிக்க முடியும் |
| **கால்நடைகளுக்கு** | **மாடு** | கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் அதிகம் ஏற்ப்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்ப்பட நேரிடும். இதனால் கால்நடைகள் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணம் காணப்படும். இவற்றில்லிருந்து கால்நடைகளை பாதுகாக்க 3.0 மி.லி பியூடாக்ஸ் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் முலம் துடைக்கவும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும்.

**இயக்குநர்**